கூ

கடவுள் துணை.

பெண்புத்திமாலை.

நன்னெறிகும்மி

பாழ்மனதுக்கறிவு.

இம்மூன்றும் அடக்கியிருக்கின்றன.

சென்னை:—ஸ்ரீ ஆதிமூலம் பிரஸில்
பதிப்பிக்கப்பட்டது.
1922.

உ

கடவுள்துணை.

பெண்புத்திமாலை.

யென்னும் - நீதிச்சிந்து.

அன்னைதந்தைகளைதெய்வமென்றேதினம் அன்பாயுபசரி
ப்பாள்பதிவிரதை-இன்னிலத்தினில் கெட்டதுரோகி எனும்
பேரையேற்றுக்கொள்வாள் மூடதடிக்கழுதை. 1

சொந்தகணவனொரு அந்தகனானாலும் வந்தனைசெய்திடு
வாள் பதிவிரதை-இல்லாமல் சிந்தையில்வெவ்வேறு யெண்ண
த்தால்கவனை சிரித்திரிவாள்கெட்டதடிக்கழுதை. 2

தனதாரணவன்மூட தடியனாயிருந்தாலும் தன்மையுடனி
ருப்பாள்-பதிவிரதை இல்லாமல் மனதுக்கிசைந்தனல்ல மன்ன
னாயிருந்தாலும் மதியாமல்பேசுவாள் தடிக்கழுதை. 3

மாமியாரடித்தாலும் நாய்செய்த குற்றமென்று மவுனமா
யிருப்பாள் - பதிவிரதை இல்லாமல் சண்டைக்கிழுப்பவளேதடி
க்கழுதை. 4

கணவன்சம்பாதனையைக் கண்டுசம்சாரத்தில் கருத்தாயி
ருப்பவளே-பதிவிரதை இல்லாமல்கணவனை மதியாமல்கண்ட
படி யழித்துகடன்காரனாக்குவாள் தடிக்கழுதை.

தண்ணிக்கிபோனாலும் தன்னடிபிசகாமல் தலைகுனிந்து போவாள்-பதிவரதை இல்லாமல் என்னத்தொழிலாக தெருவில்வந்தாலும் சண்டைஎன்னுதென்றேடுவாள் தடிக்கழுதை. 6

அன்னியபுருஷர்மெத்த அழகாயிருந்தாலும் ஆசைவையாள்னல்லபதிவிரதை-இல்லாமல் என்னச்சாதியாக யிருந்தாலும் புருஷர்மேல் இச்சைகொண்டுத்திரிவாள் தடிக்கழுதை. 7

கொண்டையில்மலர்சூடி தெருவேகவொண்ணாதென்று கூச்சத்துடனிருப்பாள்-பதிவிரதை இல்லாமல் செண்டுப்பூவானாலும் கொண்டையிலேமுடித்து தண்டுத்தனக்கள்செய்வாள் தடிக்கழுதை. 8

கொண்டகணவன்மாமி மாமனாடித்தாலும் குருக்கப்பேசாதிருப்பாள்-பதிவிரதை இல்லாமல் லண்டத்தனமாக சண்டைக்கிழுத்தவர்கள் மானங்கெடுப்பாள்கெட்ட தடிக்கழுதை. 9

காலையிலெழுந்து கணவனடிபணிந்து அவன்கருத்தைப் போலேனடப்பாள்-பதிவிரதை இல்லாமல்வேலைக்கிசோம்பலாய் பாயிள்படுத்தபடி வீண்பொழுதைக்கழிப்பாள்தடிக்கழுதை.

அங்கம்பசிகதொருதர் ஐயமெனறுவந்தால் அன்பாயுபசரிப்பாள்பதிவிரதை-இல்லாமல் தங்கவேரட்டாமலே சீரித்தெருவில்னெட்டித் தள்ளப்போவாள்மூடத் தடிக்கழுதை. 11

இன்னிலனடத்தயை சொன்னேன முனுசாமி-இதைதெரிந்துகொள்வாள்பதிவிரதை-இல்லாமல்சொனனதுபாட்டென

று தனைப்போல் பெண்களுடன் சொல்லிசிரிப்பாள்மூடத்தடி க்கழுதை. 12

சொன்னஉலகநீதிச் சொல்மனதிலெண்ணி சூட்சமாய்ந டப்பாள்-பதிவிரதை இல்லாமல் என்னபாட்டு இதை அச்சிலிட் டாரென்று-என்னை பழிப்பவளே தடிக்கழுதை. 13

பாழ்மனதுக்கறிவு.

ஆகமசாஸ்திரநூலைப்பாடியதின
அடக்கப்பொருளை கண்டுபிடி
மோகத்தைவிளக்கும் பொல்லாதநூல்களை
மூலையில்தள்ளுவாய் பாழ்மனமே, 1

சித்திரமாகவே மெத்தைவீடுகட்டி
செப்புரூஜம்பமாய் வாழ்ந்தாலும
சத்தியந்தப்பா யெமன்வருங்காலத்தில்
சம்பமுதவுமோ பாழ்மனமே. 2

கட்டினில்மெத்தையினில் சொகுசாகனித்ரை
காலமெல்லாங்கண்ட இச்சடலம்
திட்டயெமதூதர் வருங்காலத்திலே
தூங்குவதெவ்விடம் பாழ்மனமே. 3

எத்தனைகால முயிரோடிருந்தாலும்
இரம்பது சத்தியமாகையினால்
நித்தியானந்த சுகத்தைப்பெறவே
நிர்ப்பாய்நலவழு பாழ்மனமே. 4

பத்துகட்டுவீடு கட்டினாலுமெந்த
பாலும்பழத்தோடு உண்டாலுமெத்த
செத்துபோனாலுன்னை கொண்டுபோகுமிடம்
சேர்ந்துபாருநீ பாழ்மனமே 5

துள்ளினமாடு பொதிசுமக்காகென்று
சொல்லும்பழமொழி கேட்கலியோ
துள்ளலைநீக்கிநீ வள்ளலைபோற்றினால்
துணைபுரிவாரே பாழ்மனமே. 6

அன்னைதந்தைகளை தெய்வமென்றுதினம்
அடியவரைநீ பூசைசெய்தால்
தனனுதர்போல்யாவும் பாதுகாத்தால்வேறு
தானமுண்டோசொல்லும் பாழ்மனமே. 7

பொறுமைவஞ்சனை செய்யாதேசற்றும்
பொய்யானசத்தியம் சொல்லாதே
ஆறுதகோபத்தி லாறுதேகொடும்
ஆசாரசமரும் பாழ்மனமே. 8

ஆசைவார்த்தைகளை சொல்லதேசற்றும்
ஆணவங்கொண்டுத் திரியாதே
பேசிடும்வார்த்தைகள் வாழ்மையாய்பேசினால்
பெருமையுண்டோசொல் பாழ்மனமே. 9

மோசங்களசெய்து பணங்களைரொக்கமாய்
மூட்டையாய்கட்டிநீ வைத்துவிட்டு
சுரமுங்குஷ்டமுங் கண்டுமடிகிறாய்
கண்டபலனென்ன பாழ்மனமே. 10

பெற்றாரும்பெண்டி ரிருந்தாலுமுந்தன
பிள்ளைபுரவா யிருந்தாலும்
உற்றாருமற்றோ ரிருந்தாலும்இந்த
உயிருக்குதவுமோசொல் பாழ்மனமே. 11

பணத்தைமலைபோலே சேர்த்தாலும்நல்ல
பட்டாடைரத்தினஞ் சேர்த்தாலும்
பிணத்துமேலே முழந்துண்டுபோடவும்
பிரியங்கொள்வாரோசொல் பாழ்மனமே, 12

முற்றிற்று.

நன்னெறிக்கும்மி.

கள்ளுஞ்சாராயம்குடியாதே-அபின
கஞ்சாவெறியால் மயங்காதே
உள்ளமயங்கிடும் கண்ணுஞ்சிவந்திடும்
ஓட்டாண்டியுமாவாய் மானிடனே. 1

கொஞ்சங்கொஞ்சமாய்க் குடித்திடுவாய்பின
கூடும்பொருளை யழித்திடுவாய்

மிஞ்சிகடன்களும் வாங்கிடுவாய்நல்ல
மேனிவெலியுமே மானிடனே. 2

வார்த்தைகுளறிடும் வாயதுகாறிடும்.
வம்பானவார்த்தைகள் பேசச்சொல்லும்
பார்த்தவர்கெட்டக்குடிகாரனென்றுன்னைப்
பங்கமாய்ச்சொல்லுவார் மானிடனே. 3

நித்தம்நினைப்பாகவே யிருக்கும்சற்று
நோங்குடியா திருந்துவிட்டால்
பித்தம்பிடித்தவன்போ லிருக்கும்கெட்ட
பிரம்மையுண்டாகு மானிடனே. 4

மேடுபள்ளமென்றுங் காணாதுகெட்ட
மூத்திரம்நாகல் தோணாது
பாட்டைதடுமாறி தள்ளாடிவீழ்ந்து
சவம்போல்கிடப்பாயே மானிடனே. 5

தள்ளாடித்தத்திகடக்கச் சொல்லும்வீணில்
சண்டைகள்போடவும் தூண்டிவிடும்
சொன்னையில்குத்திடா ணுவிலகொண்டுபோய்
திளையில்மாட்டிடும் மானிடனே. 6

நெஞ்சுமுலர்ந்திடும் மூளைவாண்டிடும்
நேசபாசமும் மற்றுவிடும்
பஞ்சையாயெங்குமே போச்செய்யுமத்தால்
பவுசும்போய்விடு மானிடனே. 7

அசுரர்குருவான சுக்கிராச்சாரிஐயோ மதுவைகுடித்ததனால்
கசியவயிறுகிழியலானதைநாடெங்கும்சொல்லுவார்மானிடனே

ஆணவமாகத்திரியாதேசூது-ஆடும்விடந்தனிற் போகாதே
தோண்வேகற்றுநீ கொள்ளாதே யதின்தொல்லையை கேழ்ப்
பாயே மானிடனே. 9

பக்கத்திலும்நின் றும்பாராதே சொற்ப பந்தயம்கட்டியுமா
தே ரொக்கப்பணம்சில தோற்றுவிட்டாற்பொல்லா ரோஷங்க
ளாகுமே மானிடனே. 10

விட்டபணத்தைபிடிக்க நாடியப்போ மின்னும்பின்னும்
வைத்து ஆடிடுவாய் பெட்டிபணத்தையிழுத்துக்கொள்ளும் கெ
ட்டபேய்போலலைவாயே மானிடனே. 11

எவ்வளவுபணம்வைத்தாலும்ஆட ஏக்கமும் தூக்கமும்இல்
லாமல் அவ்வளவுபணம்தோத்திடிலும்கடன் ஆரையும்கேழ்ப்
பாயே மானிடனே. 12

கடன்கொடுக்கவே நாடார்களுன்னை கண்டவர்பேசவும்
மாட்டாாகள் திடமுடன் பெட்டிதானுடைத்துபொருள் திரு
டச்சொல்லுமேமானிடனே. 13

பெட்டியுடைத்துதிருடச்செய்யும் அதைபோலீசார்கண்டு
பிடிக்கச்செய்யும் கட்டியடித்து விலங்கிடும் வேளையில் கஸ்தி
படச்செய்யுமானிடனே. 14

நாடாண்டதர்மன் நளனும் இச்சூதாலே நாடுநகரமும்தோ
ற்றுவிட்டு காடேகதியாயலைந்தகதையைக்காதினாலேகேட்டறி
மானிடனே. 15

சூதினால்கெட்டவர் மெத்தவுண்டு அந்ததுன்பத்துக்கு இட
ம்வையாமல் சூதைவிலகன்று ஔவை நீதிசொன்னசொல்லை
யும் நம்புவாய் மானிடனே. 16

நன்னெறிகும்மி-முற்றிற்று.